# இரண்டாம் திருப்புதல் தேர்வு—2014—15

**வகுப்பு : 12** **வணிகவியல்** தேர்வு எண் [ ]

**நேரம் : 3.00 மணி.** **மதிப்பெண்கள் : 200**

பகுதி - அ

(i) அனைத்து வினாக்களுக்கும் விடையளி : (ii) அனைத்து வினாவிற்கும் சமமான மதிப்பெண்

40 X 1 = 40

**I. சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக :**

1. ஒரு குடும்பத்தில் பிறப்பின் மூலம் உறுப்புமை ஏற்படுவது
   a) தனிவணிகம் b) இந்துக் கூட்டுகுடும்பவணிகம் c) கூட்டுறவு சங்கம் d) கூட்டாண்மை
2. பாதுகாப்பு தொழில்களுக்கு ஏற்ற தொழிலமைப்பு வடிவம்
   a) அரசுநிறுமம் b) பொதுக் கழகம் c) துறைமுறை அமைப்பு d) வாரிய அமைப்பு
3. தன வணிகரின் பொறுப்பு
   a) முதலுக்கு ஏற்ப வரையறுக்கப்பட்டது b) சொத்துக்கு ஏற்ப வரையறுக்கப்பட்டது
   c) வரையறா பொறுப்பு d) இவை அனைத்தும்
4. கூட்டாண்மை ஏற்படுவது
   a) ஒப்பந்தத்தால் b) கூட்டாளியின் உறவால் c) அரசாங்கத்தால்
   d) இதில் எதுவுமில்லை
5. கூட்டாண்மையின் அடிப்படைக் கூறு
   a) பூரண நல்லநம்பிக்கை b) முதலீட்டிற்கான தொகை இருத்தல்
   c) கூடி தொழில் செய்யவிருப்பம் d) இதில் எதுவுமில்லை
6. கூட்டாண்மைத் தொழிலில் ஒருவர் தன்பெயரை மட்டும் பயன்படுத்த அனுமதிக்கும் கூட்டாளி
   a) உழைக்கும் கூட்டாளி b) உறங்கும் கூட்டாளி c) பெயரளவு கூட்டாளி
   d) முரன்தடை கூட்டாளி
7. நிறுமச் சட்டத்தில் அட்டவணை A என்பது
   a) நிகழ்ச்சி குறிப்பின் மாதிரி b) இருப்புநிலைக் குறிப்பின் மாதிரி படிவம்
   c) நிறும செயல்முறை விதிகளின் மாதிரி d) நிறும அமைப்பு முறையேட்டின் மாதிரி
8. எதிலும் பின்னோக்கிய மனப்பங்கு (pessimistic) கொண்ட ஊக வணிகர்
   a) கலைமான் b) கரடி c) காளை d) முடவாத்து
9. பாராளுமன்றத்தால் அல்லது சட்டமன்றத்தால் இயற்றப்படும் சட்டங்களின் அடிப்படையில் உருவாக்கப்படும் நிறுமங்கள்
   a) பட்டய நிறுமம் b) சட்டமுறை நிறுமம் c) அரசு நிறுமம்
   d) அயல்நாட்டு நிறுமம்
10. முன்னுரிமைப் பங்குகள், முன்னுரிமை பெறுவது
    a) பங்காதாயம் பெறுவதில் மட்டும் b) ஓட்டுப் போடும் உரிமை
    c) பங்குமுதல் திரும்ப பெறுவதில் மனம்
    d) பங்காதாயம் பெறுவதிலும் பங்கு முதலை திரும்ப பெறுவதிலும்
11. பங்குகள் ஒறுபிழப்பு செய்வது
    a) நிறும கடனை திரும்ப செலுத்த தவறும்போது
    b) மூன்று ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ள தவறும்போது
    c) அழைப்பு பணம் செலுத்த தவறும்போது d) இவை ஏதுமில்லை
12. நிறுமத்தின் முதலாவது இயக்குநர் நியமனம் செய்யப்படுவது
    a) சட்டமுறைக் கூட்டத்தில் b) முதல் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில்
    c) செயல்முறை விதிகளில் பெயரிடுவதனால் d) பதிவாளரால்
13. புதிய பங்குகளை விற்க வழக்கமாக பின்வற்றும் முறை
    a) பொதுவெளியீடு b) விற்பனைக்கான தருமொழி c) தரகர்கள் மூலம்
    d) ஒப்புறுதியாளர்கள் மூலம்
14. செபியில் சபை தலைவருடன் சேர்த்து ——— உறுப்பினர்கள் உள்ளனர்.
    a) 5 b) 7 c) 6 d) 8
15. பத்திரங்கள் ஒப்பந்த (ஒழுங்காற்று) சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு
    a) 1952 b) 1956 c) 1964 d) 1966
16. கூட்டுறவில் அதிகபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை
    a) 50 b) 60 c) 100 d) வரையறை இல்லை
17. கூட்டுறவு சிறப்பங்காடி அளிப்பது
    a) கடன் b) சேவை c) சரக்கு d) ரொக்கம்
18. பொதுமக்களும் இந்நிறுவனத்தின் பங்குகளை வாங்கலாம்
    a) பொதுக்கழகம் b) துறைவாரி அமைப்பு c) அரசு நிறுமம் d) எதுவுமில்லை
19. தகவலறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் குறைந்தளவு பங்கெடுப்பைக் கீழ்க்கண்ட நாட்களுக்குள் ஒரு பொது நிறுமம் பெறவேண்டும்
    a) 90 நாட்கள் b) 120 நாட்கள் c) 130 நாட்கள் d) 60 நாட்கள்
20. பொதுக் கழகத்தின் மேலாண்மை இதைப் பெற்றிருக்கிறது
    a) வரையறுக்கப்பட்ட சுதந்திரம் b) செயல்பாட்டு சுதந்திரமின்மை
    c) கட்டுப்பாட்டுடன் கூடிய சுதந்திரம் d) வரையறுக்கப்படாத செயல் சுதந்திரம்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக :**

21. அரசாங்கத்தின் கொள்கை ——— சாதகமாக உள்ளது.
22. தனிவணிகரின் பொறுப்பு ——— ஆகும்.
23. பொதுவாக தனியாள் வணிகம் ——— அளவில் செயல்படுகிறது.
24. நிறுவனத்தில் பங்கேற்காத கூட்டாளி ——— கூட்டாளி.

25. கூட்டாண்மையில் உள்ள அனைவரையும் ஒட்டு மொத்தமாக ———— என்று அழைக்கிறோம்.
26. ———— என்பது கூட்டாளிகளின் உடன்பாடு முடிவுக்கு வருவதாகும்.
27. கூட்டாளிகளுக்கு ஒரு உடன்பாட்டின்படி உரிமை வழங்கப்பட்டிருப்பின் அது ———— எனப்படும்.
28. பொதுவரையறு நிறுமத்தில் இருக்க வேண்டிய குறைந்தபட்ச நபர்களின் எண்ணிக்கை———— ஆகும்.
29. ஒரு நிறுமத்தின் அக மேலாண்மை குறித்த விவரங்கள் அடங்கியிருக்கும் ஆவணம் ———— ஆகும்.
30. தகுதிப் பங்குகளின் மொத்த இயல்மதிப்பு ———— ஆகும்.
31. முதலாவது இயக்குநர் வழக்கமாக ———— இல் பெயரிடப்படும்.
32. சட்டமுறை அறிக்கையை நிறும உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் கூட்டம் நடைபெறும் நாளுக்கு ———— நாட்களுக்கு முன் அனுப்ப வேண்டும்.
33. பங்குநரால் கூட்டம் ஒன்றில் கலந்து கொள்ள அனுமதிக்கும் நபர் ———— ஆவார்.
34. ஒரு பொது நிறும பொதுக் கூட்டத்தின் குறைவெண் ———— ஆகும்
35. ———— என்பது பங்குகளை வாங்க பொதுமக்களுக்கு விரிக்கும் அழைப்பாகும்.
36. பங்கு மாற்றகத்தின் அலுவல்பட்டியலில் நிறும பெயரை இடம் பெற செய்வது ———— ஆகும்.
37. போலட் என்பது ———— பங்கு சந்தையில் உபயோகத்தில் உள்ள ஒரு நேரடி வணிக முறையாகும்.
38. உறுப்பினர் சேவை என்பது இதன் முக்கிய குறிக்கோள் ————
39. ஏற்கனவே தனியார் துறையில் இயங்கிவரும் தொழில்களை அரசு ஏற்று நடத்தினால் அதனை ———— எனலாம்.
40. பொதுக் கழகத்தை அரசால் நியமிக்கப்பட்ட ———— நிருவாகம் செய்கின்றது.

## பகுதி - ஆ

**ஏதேனும் 10 வினாக்களுக்கு விடையளி.** **10 X 5 = 50**

41. அமைப்பை வரையறு.
42. கர்த்தா என்பவர் யார்?
43. வரையறா பொறுப்பு விளக்குக.
44. கூட்டாண்மை வரையறுக்க.
45. கூட்டாண்மை கலைப்பு - நிறுவனகலைப்பு வேறுபடுத்துக.
46. குவிவு முன்னுரிமைப் பங்கு என்றால் என்ன?
47. பங்குகளை தள்ளுபடியில் வெளியீடு என்றால் என்ன?
48. சட்டமுறைக் கூட்டம் என்றால் என்ன?
49. மாற்று இயக்குநர் என்பவர் யார்?
50. போலட் என்றால் என்ன?
51. பரஸ்பர நிதிகள் வரையறு.
52. ஒரு நபர் ஒரு வாக்கு என்பதன் பொருள் யாது?
53. கூட்டுறவு சிறப்பங்காடி நான்கு எடுத்துக்காட்டு தருக.
54. அரசு நிறுமம் வரையறு.
55. அரசு எவ்வழிகளில் தொழில் துவங்கலாம்.

## பகுதி - இ

**ஏதேனும் ஐந்தனுக்கு விடையளிக்கவும். ஒரு பக்கத்திற்கு மிகாமல் விடையளிக்கவும்** **5 X 8 = 40**

56. இந்துக் கூட்டு குடும்ப வணிக முறை பற்றி எழுதுக.
57. கூட்டாண்மையில் இளவர் கூட்டாளி பற்றி எழுதுக.
58. அமைப்புமுறையேட்டின் உள்ளடக்கம் யாவை - விளக்குக.
59. முறைகேடான ஒதுக்கீடு பற்றி குறிப்பு வரைக.
60. தனி வரையறு நிறுமத்தின் சலுகைகள் ஏதேனும் 8 கூறுக.
61. முதலீட்டாளர்களுக்கும் - ஊக வணிகருக்கும் உள்ள வேறுபாடு யாவை?
62. கூட்டுறவு சிறப்பங்காடிகளின் சிறப்பியல்புகளை விளக்குக.
63. அரசு நிறுமத்தின் இயல்புகள் யாவை?

## பகுதி - ஈ

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி. இரண்டு பக்கத்திற்கு மிகாமல் விடையளி.** **4 X 20 = 80**

64. (அ) தொழிலமைப்பின் பல்வேறு வடிவங்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) அரசுத் தொழில்களின் நோக்கங்கள் யாவை?

65. (அ) தனியார் வணிகத்தின் நன்மை குறைபாடுகள் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) செபியின் நோக்கம், இயல்புகள், பணிகள், அதிகாரம் ஆகியவற்றை விளக்குக.

66. (அ) கூட்டாண்மை கலைக்கப்படும் சூழ்நிலைகளை விவரி?

(அல்லது)

(ஆ) நிறும செயலரின் பணிகளும் கடமைகளும் விவரி.

67. (அ) பொது நிறுமத்திற்கும் தனி வரையறு நிறுமத்திற்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) கூட்டுறவு சங்கத்தின் நன்மைகளை எழுதுக.